மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


**பேச்சுப் போட்டி 2023**

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

## ஆண்டு 3

அனைவருக்கும் வணக்கம்.......

# செய்வன திருந்தச் செய்

செய்வன திருந்தச் செய் என்பது ஔவையார் வாக்காகும். நாம் எதனைச் செய்தாலும் அதனை முழுமையாகவும் நேர்த்தியாகவும் செய்ய வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

நாம் ஒரு செயலை செய்யும் முன்பு நன்கு சிந்தித்து செய்தல் வேண்டும். அவை எப்போதும் நல்லவையாக இருத்தல் வேண்டும். அச்செயலில் எமது திறமையும் பண்பும் வெளிப்பட வேண்டும். முழு ஈடுபாட்டோடும் விடாமுயற்சியோடும் செய்யும் செயல்களே எப்போதும் சிறப்பானதாக அமையும்.

எனவே நாமும் செய்யும் செயலை திருந்தச் செய்து வாழ்வில் வெற்றி பெறுவோம் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி,
வணக்கம்.

ஆக்கம் : ஆசிரியர் திருமதி. அனிதா சிவசங்கர்
ஆசிரியர் திருமதி. சிந்துஜா பைரஜன்



ஆக்கம் :
ஆசிரியர் திருமதி. அனிதா சிவசங்கர்.
ஆசிரியர் திருமதி. சிந்துஜா பைரஜன்.